05.08.2025

OS. No. 170 /2013

**DW. 1 – ஆண்டி**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

கலை மற்றும் அறிவியல் கல்லூரி டிரஸ்ட் பணத்தில் கட்டப்பட்டதா என்றால் என்னுடைய பணத்தை டிரஸ்டுக்கு கொடுத்து அதன் மூலமாக கட்டப்பட்டது. என்னுடைய NRI கணக்கிலிருந்து பணம் போதாதற்கு அந்த பணத்தை கொடுத்தேன். அவ்வாறு என்னுடைய சொந்த பணத்தை கொடுப்பதற்கு தீர்மானம் எதுவும் டிரஸ்டில் போட்டோமா என்றால் பார்த்துதான் சொல்ல முடியும். மற்ற கல்லூரிகள் அனைத்தும் வங்கியில் கடன் பெற்றுதான் கட்டினோம் என்றால் சரிதான். பொறியியல் கல்லூரி 11 ஏக்கர் 90 சென்ட்டில் அமைந்துள்ளதா என்றால் தோராயமாக சரிதான். பொறியியல் கல்லூரி அமைப்பதற்கான கட்டிடத்தை கட்டுவதற்கு பஞ்சாயத்திலிருந்து அனுமதி வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.35 ல் பக்கம் 302 ல் உள்ளது என்றால் சரிதான். கட்டிட உறுதி தன்மைக்காக வட்டாட்சியர் ஒரு சான்றிதழ் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.35 ல் பக்கம் 289 ல் உள்ளது என்றால் சரிதான். அந்த கட்டிடம் எந்த சர்வே எண்ணில் கட்டப்பட்டுள்ளது என்பதும் அந்த சான்றிதழில் உள்ளது என்றால் சரிதான். தேனா பேங்கில் பொறியியல் கல்லூரி கட்டுவதற்கு வா.சா.ஆ.28 ன்படி அடமானம் கடன் எழுதிக் கொடுத்து கடன் வாங்கினோம் என்றால் சரிதான். 10.10.2011 ம் தேதியன்று பொறியியல் கல்லூரிக்காக வங்கி கடன் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்பே கட்டிட உறுதி தன்மை குறித்து வட்டாட்சியர் ஒரு சான்றிதழ் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வங்கியிலிருந்து கடனை நான் பொறியியல் கல்லூரி கட்டுவதற்கு பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 6.12.2012 ம் தேதியில் நிர்வாக குழு தேனா வங்கியிலிருந்து வாங்கிய கடன் தொகையை எவ்வாறு செலவு செய்வது என்று தீர்மானம் ஒன்று இயற்றியுள்ளோம் என்றால் சரிதான். 60% கடன் தொகை மாணவர் சேர்க்கைக்கு செலவு செய்த பிறகு மீதமுள்ள 40% தொகையை என்ன செய்தோம் என்றால் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுவதற்கு செலவு செய்தோம். என்ன காரணத்திற்காக வங்கியில் டிரஸ்டிக்காக கடன் வாங்கினோமோ அதற்காக செலவு

செய்யாத காரணத்தினால் டிரஸ்டுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், அந்த 40% தொகையை டிரஸ்டிகள் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் 4 கல்லூரிகளுக்கான கட்டிடங்கள் கட்டிவிட்டு, அதையே காட்டி மேலும் 4 கல்லூரிகளுக்கு அனுமதி வாங்கி மோசடி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் அனுமதி பெற்றுதான் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, MCA ஆகிய கல்லூரிகளை ஆரம்பித்தோம் என்றால் சரிதான். அந்த கவுன்சில் நிபந்தனையின்படி ஒரு தொகையை கூட்டு வங்கி கணக்கில் வைப்பீடு செய்யவேண்டும் என்றால் சரிதான். அந்த வைப்பீடு தொகை மீது அந்த கவுன்சிலின் அனுமதியின்றி கடன் வாங்க கூடாது என்று சொன்னால் நாங்கள் வங்கியில் கடன் கேட்டோம், அவர்கள் கொடுத்தார்கள். அதேபோல் ஆசிரியர் கவுன்சில் பெயரில் உள்ள கூட்டு வைப்பீட்டு தொகை மீதும் அவர்கள் அனுமதியில்லாமல் கடன் வாங்க கூடாது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் கடன் வாங்கியுள்ளோம் என்றால் வங்கியில் கடன் கொடுக்க ஒப்புக் கொண்டதால் வாங்கினோம். தேனா வங்கியில் ரூ.26,35,000/- கடன் வாங்கியுள்ளதாக எங்களுடைய வருமான வரி கணக்கில் காட்டியுள்ளோம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.4ல் பக்கம் 37, 74 மற்றும் 111ல் உள்ளது என்றால் சரிதான். பக்கம் 74ல் தேனா வங்கியில் வைப்பீடு கடன் ரூ.87,75,000/- பெற்றுள்ளோம் என்றால் அவ்வாறு பெறுவதற்கு வாய்ப்பில்லை. ஒரு கல்லூரிக்கான வைப்பீட்டிலிருந்து அந்த கடன் வாங்கவில்லை என்றாலும், மொத்த கல்லூரிகள் வைப்பீடு அடிப்படையில்தான் அந்த கடன் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுடைய டிரஸ்ட் பெயரில் தேனா வங்கியில் சட்டப்படியான வைப்பீடு தவிர வேறு எந்த வைப்பீடும் இல்லை. வைப்பீடு மீது பெறப்பட்ட வங்கி கடன்கள் அனைத்தும் டிரஸ்டிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. தாட்கோ நிறுவனம் அரசு நிறுவனம் என்றால் சரிதான். அந்த நிறுவனம் SC / ST பிரிவு மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி கொடுப்பதற்கு உதவி செய்வதற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். 2006 – 2007 கல்வி ஆண்டில் 200 SC / ST பிரிவு மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி இமயம் நிறுவனமும், தாட்கோவும் இணைந்து கொடுத்துள்ளது என்றால் சரிதான். அந்த மாணவர்களுக்கான Tuition Fees,

Stifind, Food and Accommadation, Uniform ஆகிய செலவினங்களுக்கான தொகைகளை தாட்கோ வழங்கியது என்றால் சரிதான். அது மாணவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டது. அந்த தொகையில் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய தொகையான ரூ.25,59,456/- எங்கள் கணக்கில் வந்தது என்றால் சரிதான். அந்த கல்வி ஆண்டில் பயிற்சி கொடுக்கப்பட்ட 200 மாணவர்களில் சுமார் 80 பேர் அதே ஆண்டில் கலை கல்லூரியில் படித்த மாணவர்களையும் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான், பகுதி நேர வகுப்பாக அதை படித்தார்கள்.

**(வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.